# தெய்வீக மனித புது இன சிருஷ்டிக்கு

# அருட்பிரகாசரும் ஸ்ரீ அரவிந்தரும்

## அன்னையும்



அருட்பிரகாச வள்ளலார் சித்திவளாகத்தில்
திருக்காப்பிட்டு மறைந்த அறையின் கதவு

**டி. ஆர். துளசிராம்**

*ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம், பாண்டிச்சேரி*

# தெய்வீக மனித புது இன சிருஷ்டிக்கு அருட்பிரகாசரும் ஸ்ரீ அரவிந்தரும் அன்னையும்

**டி. ஆர். துளசிராம்**

*ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம், பாண்டிச்சேரி*

---

அம்பலத்து ஆடும் ஐயர் (அம்பலத்தாடையர்) மடத்து வீதியில் இராமலிங்கப்பெருமானார் பாண்டிச்சேரியில் சில மாத காலம் வாழ்ந்ததாகத் தெரிய வருகிறது. சூபர்மைண்டு (Supermind) என்று ஸ்ரீ அரவிந்தப் பெருமானால் சொல்லப்பெறும் ஞானப் பெருவெளி அம்பலத்தில் ஆடுகின்ற ஆண்டவருடன் ஒன்றாக இணைந்த வள்ளற்பெருமான் தனிச் சிறப்புப் பெற்று விளங்கினார். அவர் இறவாத தெய்வீகமான தூல உடல் பெற்றது யாவரும் அறிவர். ஆனால் அவர் இந்நிலவுலகிலுள்ள அனைவரையும் கூட்டாகவே புனிதப்படுத்தி, அதாவது அவர்களின் மனோ பிராண இந்திரியங்களைத் தூய்மைப்படுத்தி, தெய்வீக சன்மார்க்க வழியில் செலுத்தித் தெய்வீக மனிதர்களாக மாற்றுவதற்குக் கையாண்ட முறை மிகச் சிறப்பானது. தனிப்பட்ட முறையில் தமக்கு இருக்கும் பூரண தெய்வீகத் தன்மையாலும் ஆற்றல்களாலும் செய்வது போதாது எனக் கருதினார். அனைவரையும் கூட்டாகத் தூய்மைப்படுத்தி இறைவழியில் நிறுத்தி மாற்றுவதற்காக கருணை வடிவான அருட்பெருஞ்ஜோதியை, சோதி ஆண்டவரை, உலகில் நேரடியாக வெளிப்பட்டு விளங்கி நேராட்சி புரியச் செயய முடியும் எனக் கண்டார். இவ்வழியில் துணிந்து செயல்படலானார். இது தமக்கு ஆண்டவர் இட்ட சிறப்புப்பணி எனக்கருதி நிறைவேற்ற முற்பட்டார்.

ஆண்டவரின் அருள் அவருக்குப் பூரணமாக இருந்தது. "இவ்வுலகமெலாம் களிப்படைய நமது சார்பின் அருட்பெருஞ்ஜோதி தழைத்து மிக விளங்கும்" என மக்களுக்கு அறிவுறுத்தி, அருட்பெருஞ்ஜோதி நேராக உலகில் தமது மூலம் பொதுவானதொரு வெளிப்பாடு அடைவதற்காகச் செய்த முயற்சிகளில் சத்திய ஞான சபையை வடலூரில் தோற்றுவித்தது முதல் காரியமாகும். அருட்பெருஞ் ஜோதியே எல்லாமாகி இவ்வுலகாகவும் அமைந்து இருப்பினும், அது இங்கு நேர்முகமாக அன்றி மறைமுகமாகவே செயல்பட்டு விளங்குகிறது. நேர்முக மான ஜோதியைக் கொண்டுவரும் முயற்சிகளில் வள்ளல் பெருமான் "அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி" என்னும் மகா மந்திரத்தை மக்கள் எல்லோருக்கும் ஜோதியை உலகிற்கு வரவேற்கும் மந்திரமாகக் கொடுத்து அருளினார். நேர் முகமான அருட்பெருஞ்ஜோதியை வரவேற்கும் முறை யிலே சத்திய ஞான சபையைத் திறந்திருந்தார் என்றாலும் ஜோதி இந்நிலவுலகிற்கு உடனடியாக வந்துவிடவில்லை.

தம்மைப் பொறுத்த மட்டில் அருட்பெருஞ்ஜோதி அனுபவத்தைப் பூரணமாகத் தம் ஆதாரத்தின் முழுவதிலும், மேலும் கீழும், உள்ளும் புறமும், சுற்றும் சூழ்வும், மனோபிராண இந்திரியங்கள் உள்பட உடலிலும் நிறைந்து விளங்கும் பேற்றை வள்ளல் பெருமான் பெற்றிருந்தார் என்றாலும் ஜோதியை உலகிற்குக் கொண்டு வரவும், இங்கு நிலவுலகில் நிலை நிறுத்தவும், கூட்டாக எல்லா மக்களிடை உள்ளும் புறமும் விளங்கி நேரடியான அரசாட்சி செய்யவும் வேண்டி அவர் எல்லா வழிகளிலும் முயன்று ஈடுபட்டார். சில சமயங்களில் இதற்காகத் தனிமையில் சென்று வாழ்ந்தார். சத்திய ஞான சபைக் கோவிலைத் திறந்தார். மகாமந்திரம் வழங்கினார். மேட்டுக் குப்பத்தில் உள்ள சித்திவளாக மாளிகையில் தவங் கிடந்தார்.

அருட்பிரகாச வள்ளலாரின் அருந்தவத்தால், முடிவில் **30-1-1874** நன்னாளில் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் அவர் வாழ்ந்த இடத்திலேயே வந்து மையங்கொண்டு

அமர்ந்து உலகுக்கு அருள் செய்தார். "சபை விளம்பரம்" எனும் கடைசி அறிக்கையில் வள்ளல்பெருமான் பொது மக்களுக்கு ஜோதி ஆண்டவர் தாம் வாழும் இடத்திலேயும் வந்து குடிகொண்டார் என அறிவுறுத்தினர், நிதரிசனமாகத் தூல உலகில் வந்த ஆண்டவர் மறுபடியும் திரும்பிப் போகும் வாய்ப்பு ஏற்படாமலிருக்கவும், உலகில் தாம் வாழும் பகுதியிலே, உலகப் பிரதிநிதித்துவம் பொதுவாக வாய்ந்த வடலூரிலே ஜோதி ஆண்டவர் அமர்ந்து வீற்றிருந்து என்றென்றும் அருளரசாட்சி செய்யவேண்டித் தாம் அருமையாகப் பெற்ற ஒளிமயமான இறவா திவ்ய உடலை அர்ப்பணித்துத் தியாகம் செய்தார். தெய்வீக உடலும் மற்றவர் கண்ணுக்குத் தெரியாதபடி மறைந்தது என்றாலும் இவ்வுலகப் பொதுவில் ஊடுருவி விளங்கிச் செயல்படுகிறது என்று அறிவோம். இது மகத்தான தியாகமாகும். இதன் அருமையையும் பெருஞ்சிறப்பையும் மக்கள் உணர்ந்திலர். என்றென்றும் அமரத்துவம் பெற்ற தூல திவ்ய உடலை, சுத்த-பிரணவ-ஞான தேகங்கள் மூன்றும் ஒன்றாக இணைந்த உடலை, உலக மக்களின் கூட்டான தெய்வீகப் பரிணாம வாழ்வின் பொருட்டு, அப்போது வந்து அமர்ந்திருந்த அருட்பெருஞ்ஜோதியாரின் முன்னிலையில் தியாகம்செய்தார். மரணமிலாப் பெருவாழ்வு, இன்றில்லை என்றாலும் என்றாவது எல்லோரும் பெறுவதற்கு ஆவன செய்யவேண்டும் என உளங்கருதி, எல்லோர் உடம்புகளிலும் தன் தெய்வீக இறவா உடலின் சக்திகளுடன் இறவா உடல் தாதுக்களுடனும் புகுந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த விருப்பப்படி புகுந்துகொண்டார் எனச்சொல்லலாம். மேலும் ஜோதி ஆண்டவர் இவ்வுலகிற்கு வந்து தமது திவ்ய உடலைத்தழுவி அணைத்ததால, இறவாத உடல்சக்திகளையும் தாதுக்களையும் பொன் ஒளியையும் இந்நிலவுலகின் அடித் தளத்தில் மரணமிலாப் பெருவாழ்வின் ஆணிவேராகப் பதித்துத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டார்.

ஒரு சில மகான்கள் சுவர்க்கம் புகுந்து அங்கு நிலை பெறுவதற்காக இவ்வுலகை விட்டுப் புறக்கணித்து நீங்கி

உடலைக் கரைத்து மறைந்ததற்கும் வள்ளலார் மறைந்ததற்கும் அடிப்படையான வித்தியாசமுண்டு. அருட்ஜோதி கொணர்ந்து இவ்வுலக வாழ்வை மாற்றுவதற்கும், தெய்வீக மனித புது இனத்தைப் படைப்பதற்கும் தம் உடலின் உருவம் கரைத்து அதே சமயம் அதன தெய்வீகமயமான தூல தாதுப்பொருட்களை உலகின் சூழலிலும் ஜடத்திலும் ஊடுருவி வியாபிக்கச் செய்து இந்நிலவுலகிலும் தங்கியுள்ளார். தூல உடல் வடிவமின்றியே தூலமாகவும் உலகில் வாழ்கின்றார். அவருடைய உடல் கரைந்து மறைவுற்றது புது சிருஷ்டிக்கு விதைத்த விதையாகும்.

இத்தகைய தியாகம் உலக மக்களின் கூட்டுப் பரிணாம தெய்வீக வாழ்வுக்கு இதுவரை யாரும் செய்ததில்லை. தெய்வீகக் கூட்டுப் பரிணாமம் என்பதை சற்று விளக்குவோம். இப்போது பிறக்கும் குழந்தைகள் இயல்பாகவே உடல், இந்திரிய, மனோ வளர்ச்சிகளைப் படிப்படியாகப் பெற்று வளர்ந்து, வாலிப வயதிற்குப் பின் அதன் மேலும் இயல்பாக வளராமல் தங்கிவிடுகிறது. ஆனால் அருட்பெருஞ்ஜோதி நிலவுலகில் நேர்முகமாகச் செயல் படும்போது, பிறக்கும் குழந்தைகள் இயற்கையான மனோ வளர்ச்சிக்குப் பின்பும், புது வகையான தெய்வீக இயல்பு நோக்கி வளரும் மனோ இந்திரிய உடல் வளர்ச்சிகளைத் தாமாகவே பெறுவர். இதனால் வள்ளல் பெருமான் தமது அகக் காட்சியில் பார்த்தபடி, உலக மக்கள் ஒரு புது வகையான தெய்வீக வாழ்வுபெறுவர். உடல் பலமிக்கவர் பண்புளோராக மாறுவார்கள். மூடர்களும் மதிபெற்று வாழ்வார்கள். பக்தர்களும், முத்தர்களும், சித்தர்களும் பெருமளவில் சிறப்புற்று விளங்குவார்கள். உலக மக்கள் இனங்கள் எல்லாம் சுமுகமாக மருவிக் கலந்து இணைந்து ஒற்றுமைப்பட்டு வாழ்வார்கள். உலகம் முழுவதும் ஓர் அருளரசாட்சியின் கீழ் அமையும். பொருள் வளமும்பெருகும். மரணம், பிறப்பு ஆகியவற்றின் தன்மைகளில் பெருத்த மாறுதல் ஏற்படும். பிறப்பு சிருஷ்டிகள் பலவகையாக மாறி இடம்பெறும். அணுபட்ச, பரமாணுபட்ச, பிரகிருதிபட்ச, சம்புபட்ச,

விபுபட்ச சிருஷ்டிகளால் மனித இனப் பிறப்புகள் பல வகையாக மாறும். அதாவது பக்குவ உணவு ஔஷதங்களின் துணையாலும் ஆண் பெண் சேர்க்கையாலும் நிகழும் பிறப்புகள்; சேர்க்கையின்றியே பெண்ணைப் பரிசித்துத் தொடுவதால் ஏற்படும் பிறப்புகள்; அவளைப் பார்த்த மாத்திரத்தாலும், அவளுக்கு வாக்குக்கொடுப்பதாலும் கருதரித்து ஏற்படும் பிறப்புகள், அவளுக்குக் குழந்தை உண்டாக சங்கல்பம் அல்லது நிறை எண்ணம் கொண்டதும் உண்டாகும் பிறப்புகள். கடைசியாக ஆன்மாக்கள் தாமாகவே தாயின் கருவின் துணையின்றித் திவ்ய மேனி உயிர் உடலுடன் உலகில் நேராகத்தோன்றிக்கொண்டுவரும் பிறப்புகள்; இன்னும் முடிவில் ஜடப் பொருள்களும் உணர்வு பெற்று மனிதர் செய்யும் செயல்களைச்செய்யும் சிருஷ்டி. இறப்பும் மாறுதலடையும். அடிக்கடி சிறுவயதில் இறப்பதும் உணர்வின் வளர்ச்சியின்றித் தூக்கத்திலும் சாக்காட்டிலும் வாழ்நாள் பயனற்றுப்போவதுமின்றி, மனிதர் சிறு வயது முதற்கொண்டே படிப்படியான உணர்வு வளர்ச்சிகளுடன் நீண்டகாலம் வாழ்வார்கள். முதிய வயதினரும் வாலிபத் தன்மை உடலளவிலும் அடைவர். இறந்தாலும் சோதியின் நேர் உதவியால் மறுபடியும் சிறிது கூடிய ஞானத்துடன் எழுந்து சிலகாலம் இங்கே வாழ்வார்கள். சன்மார்க்க யோகம் பயிலுபவர் தன் ஆன்மா உணர்ந்து பேரிறைவனில் நிலைத்து நரைதிரை மூப்பு மரணம் இல்லாத பெருவாழ்வை எய்துவர். அருட்பெருஞ்ஜோதி உலகிற்கு வந்ததும் எல்லோரும் யோகமின்றியே ஓரளவு பயனடைவர். அதாவது கீழ்த்தர ஆசைகளும் பற்றுகளும் இயல்பாகவே விட்டுவிட்டுப் புனிதத் தன்மையை ஓரளவு எல்லோரும் பெறுவர். யோகம் செய்பவர் மேலும் தெய்வீகத் தரமான வாழ்வைச் சீக்கிரமாகவும் சுலபமாகவும் அடைவர் நரை திரை மூப்புமரணம் இல்லாத ஒரு புது தெய்வீக மனித இனமும் தோன்றும். இவ்வாறாக வள்ளல் பெருமான் தமது அகக் காட்சியில் கண்டார். இவைகள் எல்லாம் உடனடியாக ஏற்படா விட்டாலும் காலக்கிரமத்தில் - ஆயிரம் ஆண்டுகள் அல்லது மேலும் காலம் பிடிக்கலாம் - நிறைவுறும். இதற்கான தெய்வீக விதையை

இங்கு ஊடுருவலாக, பரவலாக உலகம் பொதுமைக்கு இட்டு அர்ப்பணித்தவர் நம் வள்ளல் பெருமானே.

மரணமிலாப் பெருவாழ்வு என்பதையும் சற்று விளக்குவோம். தெய்வீக ஒளிமயமான தூல உடலைப் பெற்ற சத்திய ஞான சித்தர்கள் உடல் நோயின்றி, மூப்பின்றி, விபத்துக்களின்றி, யம பயமின்றி, யமனின் கட்டாய உயிர் பிரிப்பின்றி, தமது விருப்பப்படி நெடுங்காலமாகவோ அல்லது நிரந்தரமாகவோ உலகில் வாழலாம். அல்லது இறைவன் இட்ட பணி முடிக்கும் வரை இங்கு வாழ்ந்து செல்லலாம்; எனினும் தாமாகவே உடலை விட்டுப் போகவும் அந்த ஆன்மாவுக்கு அல்லது உயிருக்குச் சுதந்திரமுண்டு. இல்லையெனில் இறவா உலக வாழ்வு ஒரு சிறையாக அமையும். திருமூலர் விளக்கமாகச் சொல்வதைக் கவனிப்போம் "இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி". "இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி" — திருமந்திரம் 80, 93. திருமூலரும் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்து பின் தாமாகவே பூரண சுதந்திரத்துடன் உடல் விட்டுச் சென்றார் சமாதியிலுள்ள அவர் உடல் கெடாது நல்ல நிலையிலிருக்கும் எனத் தோன்றுகிறது. ஆனால் வள்ளலாரின் தெய்வீக உடல் இன்னும் சிறப்புப் பெற்றிருந்தது. அது பொதுத்தன்மை வாய்ந்து உலக மக்களின் உடல்களிலும் உலகத்தின் ஜடத்திலும் அஞ்ஞான இருளிலும் ஊடுருவக் கூடிய தெய்வீகப் பஞ்சபூதங்களின் ஒரு பொது நிலை பெற்றிருந்தது. "போகாத புனலாலே சுத்த உடம்பினராம் புண்ணியரும் நண்ணரிய பொது நிலையும் தந்தீர்" என வள்ளல் பெருமான் ஜோதி ஆண்டவரை வாழ்த்துகிறார். ஆகவே அவர் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் முன்னிலையில் உலக மக்கள் திரளின் தெய்வீகத் தரமான கூட்டுப் பரிணாம வாழ்வுக்காகத் தம் இறவாத திவ்ய உடலை அர்ப்பணித்து அதன் "பொதுநிலைத் தன்மையால்" இங்கேயே உலகப்பொது உடலைத் தாங்கி நம்மிடையே வாழ்கிறார்.

அருட்பெருஞ்ஜோதி அனுபவம் கொண்டு விளங்கும் அரவிந்த ஆசிரமவாசியான கங்காதர சுவாமிக்கு அண்மையில் (14-1-78ல் தைப்பொங்கல் நன்னாளில்) ஏற்

பட்ட ஒரு மணி நேர ஞானக்காட்சியின்படி, வள்ளலார் வாழ்ந்த இடத்தில் பேரிறைவன் தூலமாக வந்து வீற்றிருந்தபோது அருட்ஜோதி வள்ளலாருடைய இதயத்திலிருந்து வெளிப்பட்டு அதன் தெய்வீகக் கனலால் அவருடைய ஒளிரும் தெய்வீகப்பொன்னுடலை எரிக்காமல் எரித்து குறைவிலாது ஒளிரும் முழு வெண்ணுடலாக்கி, பின்னும் எரித்து, உணர்வும் ஒளியும் கற்பூர மணமும் கூடிய வெண்துகளணுக்களாக்கி அவற்றை விஸ்வப் பிரபஞ்சத்திலும் இப்புவியிலும் அதன் உயிர்ப்பொருள்களிலும் ஜடப்பொருள்களிலும் ஜடம் தோற்றுவித்த பேரிருளிலும் ஊடுருவிப் பரப்பி, மேலும் இறை உணர்வு மயமான மேலுலகங்களிலும் வியாபிக்கச் செய்து, முடிவில், விஸ்வப்பிரபஞ்சத்தை தன்னுள் கொண்ட பொன்மய விஸ்வரூபமாக வள்ளல் பெருமான் காட்சி அளித்த பின், பொன்மய அருட்ஜோதியாக எங்கும், ஜடத்திலும் இருளிலும் வியாபித்தது. கங்காதரனின் முழு ஆதாரத்திலும் உயிரிலும் உடலிலும் அப்பொன்னொளி ஊடுருவி நிரம்பி இன்பம் விளைவித்தது. ஆகவே வள்ளல் பெருமான் நம்மிடையே உடலின்றியே தூலமாகவும் அருட்ஜோதியாகவும், பொன்னொளியாகவும் கற்பூர மணமாகவும், ஆன்ம உணர்வுடன் ஒன்றி ஒளிரும் வெண்நீற்று அணுக்களாகவும் வாழுகிறார். உருவமாகவும் அருவமாகவும் உருஅருவமாகவும் விளங்கி புது உலக தெய்வீக வாழ்வு மலர்ந்து எங்கும் தழைக்கும் வண்ணம் உருவாக்குகிறார். அவருடைய இறவாத மறைவு புது சிருஷ்டியின் பிறப்பாகும்.

அரவிந்த ஆசிரம அன்னையின் முதுமையான உடலில் 1-1-1969ல் முதல் ஈராண்டு வரை நேரடியாக ஊடுருவிய தெய்வீகப் பொன்னொளி நிழற்சாயை சிறிதும் இன்றி கருணையுடன் கூடி அவருடைய உடல் தாதுக்களுக்கு புத்தின்பமும் தெம்பும் ஊட்டித் தழைக்கச் செய்தது. இப்பொன்னொளி மேலே சொல்லியபடி, கருணை வடிவான வள்ளல் பெருமானின் நிழலற்ற பொன்னொளி மயமான உடற தாதுக்கள் கரையப் பெற்று எழுந்த பொன்னொளியே எனத்தோன்றுகிறது.

வள்ளல் பெருமான் சென்ற வழியிலே நின்று வாழ்ந்த ஸ்ரீ அரவிந்தரும் ஸ்ரீ அன்னையும் சூப்ராமெண்டல் லைட் என்னும் தெய்வீகப் பேரொளியை உலகுக்கு நேர்முகமாகக் கொண்டு வருவதற்காகத் தவம் ஆற்றினர். அவர்கள் உடலையும் தெய்வீகமாக மாற்ற இடையறு முயற்சி செய்தனர். அவர்களும் வள்ளலார் வாழ்ந்த இதே பகுதியில் புதுச்சேரியில் ஆசிரமம் வைத்து உலகின் கூட்டுப் பரிணாம தெய்வீக வாழ்விற்காகத் தமக்கு இட்ட ஆண்டவர் பணியைச் செய்து முடித்தனர். இந்த உலக முழுவதும் பரவலாக ஊடுருவும் ஜோதியைக் கொண்டுவரும் முயற்சியில் ஸ்ரீ அரவிந்தர் தம உயிரைத் தியாகம் செய்தார். ஒரே இலட்சியப் பாதையில் சென்ற வள்ளல் பெருமானின் மகத்தான இறவா உடல் தியாகத்தாலும், ஸ்ரீ அரவிந்தரின் உயிர்த் தியாகத்தாலும், ஸ்ரீ அன்னை 1956 ஆம் ஆண்டு பிப்ரவரி 29-வது நன்னாளில் சூப்ராமெண்டல் லைட் எனும் விஞ்ஞான ஒளியை, அருட்பெருஞ்ஜோதியை உலகுக்கு நேராக வெள்ளம் எனப் பாயும் வண்ணம் கொணர்ந்தார். அது இடைவிடாது உலகுக்கு அன்று முதல் ஒளி வெள்ளமாக வந்து கொண்டிருக்கிறது. இந் நிலவுலகின் சூட்சும பூதப் பகுதியில் நேர்முகமாக அது செயல்படுகிறது. தூலப்பகுதியும் அது ஒரு நாள் அடையும். இதற்காக வள்ளல் பெருமானின் இறவா உடற் கருவூலம் பூமியில் பதிந்திருப்பதால் உலகின் தூலப்பகுதியிலும் சோதி இடங்கொள்ள வழி பிறக்கும் என்பது நிச்சயம். ஆகவே இப்புதிய திவ்ய ஜோதியின் பயனாக உலகில் புது வாழ்வும் புது மலர்ச்சியும் தெய்வீகத் தன்மையுடன் கூடி மிளிர்வதாயுள்ளன. அருட்பிரகாச வள்ளல் இராமலிங்கப் பெருமானாரும், ஸ்ரீ அரவிந்தரும் ஸ்ரீ அன்னையும் இவ்வுலகின் கூட்டுப்பரிணாம தெய்வீக வாழ்விற்கு அடிக்கல் நாட்டிய சித்தர்கள் எனப் போற்றி வாழ்த்துவோம்.

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதி